**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்,**
**முன்னிலை : Ms.மதிவதனி வணங்காமுடி, B.A.,L.L.M.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**

2024 ம் ஆண்டு ஜுலை மாதம் 24 ம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண். 3/2023**
**அ.வ.எண். 448/2014**

முருகேசன் .... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. நாச்சிமுத்து
2. பழனிச்சாமி

.... 1, 2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

3. N.சசிக்குமார்
4. G.நல்லசிவம்

....3, 4 எதிர்மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்கப்பட வேண்டிய நபர்கள்

இம்மனுவானது 17.04.2024 அன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பன்னீர் செல்வம்.,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.T.சேகர்.,,B.Sc.,L.L.B., அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.உதயசங்கர்.,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 4 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வழக்கறிஞர் திரு.பாலசந்தர்.,B.Com.,L.L.B., தரப்பில் மனு, எதிருரை, மனுதாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், வாதி மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

இம்மனுவானது கட்டளை 1, விதி 10(2)–ன் படி 3, 4 எதிர்மனுதாரர்களை, 3, 4 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

மேற்படி வழக்கில் வழக்கு புல எண்ணான பழைய க.ச.எண்.336 க்கு



MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.07.24 17:35:28 +0530

ரீ.ச.எண்.299/2 பூமியில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மொத்த விஸ்தீரணமான பு.ஏ.4.47 விஸ்தீரண பூமியில் மனுதாரருக்கு பு.ஏ.2.10 விஸ்தீரண பூமியை கார்த்திகேயனுக்கு கிரையம் கொடுத்துள்ளதில் அது போக எஞ்சிய பு.ஏ.2.37 விஸ்தீரண பூமி மனுதாரருக்கு பாத்தியப்பட்டதாகும் என்றும், மேற்படி சொத்தின் கிழபுறம் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பு.ஏ.2.99/3 பூமி உள்ளது என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் மனுதாரருடன் கருத்து வேறுபாடு கொண்டு மனுதாரரின் பூமியின் கிழகோட்டு பகுதியை ஆக்கிரமித்து கம்பிவேலி அமைக்க முயற்சித்ததால் மனுதாரர் இரண்டு பூமிகளுக்குமிடையேயான அத்தை நிர்ணம் செய்து விட்டு பின்னர் அத்தில் கம்பி வேலி அமைத்துக் கொள்ளும்படி எதிர்மனுதாரர்களை கேட்டதில் அவர்கள் ஒத்துக் கொள்ளாமல் மனுதாரரின் பூமியின் கிழகோட்டு பகுதியை ஆக்கிரமித்து கம்பி வேலி அமைக்கும் நோக்கில் செயல்பட்டதால் மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், 2 ம் எதிர்மனுதாரர் 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு மனுதாரரின் பூமியில் மேல்கோட்டில், பூமியின் கிழபுறத்தில் தலா 25 பூமியை கடந்த 24.01.2023 தேதியில் கிரையம் கொடுத்துள்ளதும் மேற்படி ஆவணங்களை வைத்துக் கொண்டு எதிர்மனுதாரர்கள் அனைவரும் சேர்ந்து கொண்டு இரு பூமிகளுக்கு இடையேயான அத்து பிரச்சினை குறித்து இந்த வழக்கு நிலுவையில் இருப்பதையும் பொருட்படுத்தாமல், மனுதாரரின் பூமியின் கிழகோட்டில் 10 அடி அகலத்தை ஆக்கிரமிப்பு செய்து கம்பிவேலி அமைத்துள்ளது மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், எனவே 3, 4 எதிர்மனுதாரர்களை 3, 4 பிரதிவாதிகளாக வழக்கில் கட்சி சேர்க்க வேண்டும் என்று மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



MATHIVATHANI VANANGAMUDI Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI Date: 2024.07.24 17:35:54 +0530

**2) 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :**

3ம் எதிர்மனுதாரர் இந்த அசல் வழக்கில் 1ம் பிரதிவாதியான நாச்சிமுத்து என்பவருக்கு தாராபுரம் சார்பதிவக பாக சாசன ஆவண எண்.484/2023ன் படி B ஜாபிதாவாக பிரித்து மேற்படியார் சர்வசுதந்திரமாய் வில்லங்கசுத்தியாய் அனுபவித்து வந்த சொத்துக்களை தகுந்த பிரயோஜனத்தின் பேரில் கடந்த 24.01.2023ம் தேதியில் சுத்த கிரையத்திற்கு பெற்று அனுபவித்து வந்த நிலையில் மேற்படி 3ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சித்தரவுன்பாளையம் கிராமம் ரீ.ச.எண்.299/3A3A3 காலை பூமியை உரிய தொகை செலுத்தி வருவாய்துறையினர் மற்றும் நிலஅளவையருடன் அளவீடு செய்து நான்குமால் அத்துக்கள் கண்டு ரீ.ச.எண்.299/3A3A ஆக இருந்த மொத்த பூமியில் இந்த 3ம் எதிர்மனுதாரருக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்களை ரீ.ச.எண்.299/3A3A3 ஆக உட்பிரிவு செய்யப்பட்டு மேற்படி உட்பிரிவின் படி கடந்த 19.07.2023ம் தேதி தமிழக அரசு வருவாய்துறை சார்பில் பட்டா மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர் அசல் வழக்கு அவரது பாக பூமியின் அத்துக்களை நிர்ணம் செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் அரசு நில அளவையரால் அளவீடு செய்யப்பட்டு அத்துக்கள் நிர்ணையக்கப்பட்டும் ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை என 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் : (1, 2 எதிர்மனுதாரர்கள் 4ம் எதிர்மனுதாரரின் எதிருரையை ஏற்றுக் கொள்ளப்பட்டது)**

1, 2 எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூமியில் ரீ.ச.எண்.292/3 எண் காலையில் 25 செண்ட் பூமியினை குறிப்பிட்ட செக்குபந்தி கண்டு வருவாய்துறை ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள அளவுகளுக்கு உட்பட்டு 3, 4



MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.07.24 17:36:09 +0530

எதிர்மனுதாரர்களுக்கு கடந்த 24.01.2023ம் தேதியன்று கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், 4ம் எதிர்மனுதாரர் கிரையம் பெரும் பொழுது வருவாய் துறை ஆவணங்களில் சரி பார்த்த பொழுது எவ்விதமான வில்லங்கமும் இடம்பெறவில்லை என்றும், மேலும் 4ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்று சுமார் 11 மாதங்களுக்கும் மேலாக தனது தனித்த சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் என்றும், 4ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற பூமியினை தனக்கு பாத்தியப்பட்ட பூமியில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றும், ஆக்கிரமிப்பு செய்து, கம்பி வேலி அமைத்துள்ளார் என்று சொல்லியுள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டது.

4. மனுதாரர் தரப்பில் 1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சி சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வாதி மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்?

இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**6. தீர்வு:–**

6.1 3, 4 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் 3, 4 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு மனுதாரர்/வாதியால் விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில், 2ம் எதிர்மனுதாரர், 3, 4 எதிர்மனுதார்களுக்கு தங்கள் பூமியிலுள்ள மேல்கோட்டில் 25 செண்ட் பூமியினை



MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.07.24 17:36:24 +0530

24.01.2023 தேதியிட்டு, 3, 4 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளதாகவும், எனவே 3, 4 எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றும், மனுதார்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. அதற்குண்டான ஆவணங்கள் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.2. எதிர்மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மேற்படி 24.01.2023 தேதியில் கிரையம் பெறப்பட்டதை 3, 4 எதிர்மனுதாரர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். அசல் வழக்கினை மனுதாரர்/வாதி வழக்கு சொத்து தனக்கு தனித்து பாத்தியப்பட்டது என கோரியிருக்கும் நிலையிலும், AB பகுதியில் கம்பிவேலி அமைக்கக்கூடாதென பரிகாரம் கோரியுள்ள நிலையில், வாதி பூமியின் கிழபுறத்தில் 3, 4 எதிர்மனுதாரர்கள் கிரையம் பெற்றுள்ளது இந்நீதிமன்றத்திற்கு தெளிவாக தெரிய வருகிறது. எனவே, இவ்வழக்கிலுள்ள பிரச்சினைகள் குறித்து தீர்மானம் செய்ய 3, 4 எதிர்மனுதாரர்கள் வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**7. முடிவாக,**

(i) இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

(ii) வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை கருதி செலவுத் தொகை இல்லை

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சசருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 24.07.2024 ம் தேதி கையெழுத்து செய்யப்பட்டது.

MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.07.24 17:36:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| ஆவண குறியீடு | தேதி | ஆவணம் மற்றும் தன்மை |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 24.01.2023 | 1ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரருக்கு கொடுத்த கிரைய ஆவணம் – பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 24.01.2023 | 1ம் எதிர்மனுதாரர் 4ம் எதிர்மனுதாரருக்கு கொடுத்த கிரைய ஆவணம் – பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 14.09.2023 | மனுதாரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற மருத்துவக் குறிப்பு – நகல் |
| ம.சா.ஆ.4 | – | மனுதாரர் கொடுத்த புகாருக்கு தாராபுரம் காவல்துறையினர் கொடுத்த மனு ரசீது – அசல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை**

MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.07.24 17:36:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
தாராபுரம்.